J - 2012

**1301**

Register Number | | | | | |

## பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. பயனின் மூப்பிற் சான்றோரின் முதுமைத் தோற்றத்தைக் கூறுக.

2. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை ?

3. சுந்தரகாண்டம் என்று பெயர் வரக் காரணம் யாது ?

4. ஒட்டக்கூத்தர் - பெயர்க்காரணம் தருக.

5. குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் பம்பரம் சுற்றி விளையாட முடியவில்லை ?

6. சுந்தரர் தம்பிரான் தோழர் என்றழைக்கப்படக் காரணம் யாது ?

[ Turn over

www.kalvisolai.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

8. வினை மேற் சென்ற தலைவனிடம் தூதுவந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ?

9. அறிவின் இலக்கணத்தை எழுதுக.

10. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை ?

11. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக: 3 × 4 = 12

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

14. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?

15. சுவடிச்சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

16. குலசேகராழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'செய்ந்நன்றியறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. இராவணன் வருகையும், அதன்பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை அனுமன் உரைத்த பாங்கினை இருபது வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

www.kalvisolai.com

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20. ''வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சிலோதியை வரக் கரைந்தீமே'' —

அ) இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது ?

ஆ) இவ்வரிகள் பாடிய புலவர் யார் ?

இ) இது யாரிடம் யார் கூறியது ?

ஈ) இதில் அமைந்துள்ள இறைச்சிப் பொருள் யாது ?

*அல்லது*

21. ''வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க
மறப்பரிது நும்நன்றி என்றாள் அன்னம்''

அ) இவ்வடிகள் பயின்று வரும் நூல் எது ?

ஆ) இந்நூலை இயற்றியவர் யார் ?

இ) இவ்வடிகள் யாரிடம் யார் கூறியது ?

ஈ) 'மறப்பரிது நும் நன்றி' செய்த நன்றி யாது ?

VI. 22. ''ஒன்றேயென்னின்'' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. ''பயன்தூக்கார்'' எனத் தொடங்கும் குறளையும் ''நோய்'' என முடியும் குறளையும் அடிபிறழாது எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) வாழிய ஆ) இரங்குவீர் இ) முழங்கிய

ஈ) கொள்வர் உ) உணர்மின் ஊ) நடந்தன.

www.kalvisolai.com

25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) திருந்துமொழி ஆ) கடிமகள்

இ) மறவற்க ஈ) தழீஇ

உ) கண்ணீர்வெள்ளம் ஊ) புடைபுடை.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) தினந்தினம் ஆ) மானுழை இ) தினையளவு

ஈ) தண்குடை உ) பூஞ்சோலை ஊ) மண்ணரசு.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பொதுவியல்திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சி.

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை 1 × 4 = 4

இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

தற்குறிப்பேற்றணி அல்லது சொற்பொருட்பின்வரு நிலையணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. மணிமேகலை | — | கிருஷ்ணப் பிள்ளை |
| 30. தேவாரம் | — | உமறுப்புலவர் |
| 31. சீறாப்புராணம் | — | சீத்தலைச் சாத்தனார் |
| 32. இரட்சணிய யாத்திரிகம் | — | சுந்தரர் |
| | — | குணங்குடி மஸ்தான். |

www.kalvisolai.com

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்

அ) நக்கீரர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. 'நெடுந்தொகை' என்றழைக்கப்படும் தொகைநூல்

அ) புறநானூறு

ஆ) அகநானூறு

இ) நற்றிணை.

36. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்

அ) 4

ஆ) 9

இ) 10.

37. தேனிலே ஊறிய தமிழின் சுவைதேறும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

www.kalvisolai.com

38. சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

39. சாகித்ய அகாதெமிப் பரிசு பெற்ற நூல்

அ) பிசிராந்தையார்

ஆ) பாண்டியன் பரிசு

இ) குடும்ப விளக்கு.

40. கொன்ஸ்டான் என்னும் சொல்லுக்குப் பொருள்

அ) கொன்றவன்

ஆ) அஞ்சாதவன்

இ) வேற்று நாட்டவன்.

41. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம்

ஆ) உலா

இ) பள்ளு.

42. பிரபந்தம் என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை நூல்.

www.kalvisolai.com

43. சுரதாவின் நூல்களுள் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற நூல்

அ) தேன்மழை

ஆ) துறைமுகம்

இ) சுவரும் சுண்ணாம்பும்.

44. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ் அன்னை விருது பெற்ற கவிஞர்

அ) அப்துல் ரகுமான்

ஆ) சுரதா

இ) தாராபாரதி.

45. வரி என்பது - வகையது

அ) சந்தப்பாடல்

ஆ) இசைப்பாடல்

இ) கலிப்பாடல்.

46. தமிழக அரசின் பரிசு பெற்ற 'இமயம் எங்கள் காலடியில்' என்ற கவிதைத் தொகுப்பு நூலை இயற்றியவர்

அ) தாராபாரதி

ஆ) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

இ) கவிக்கோ அப்துல் ரகுமான்.

47. சின்னச்சீறா என்ற நூலை எழுதியவர்

அ) உமறுப்புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனு அகமது மரைக்காயர்.

www.kalvisolai.com

48. கிறித்தவக் கம்பர் என்றழைக்கப்பட்டவர்

அ) கம்பர்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. எழுமை ................ உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் ................ .

50. துன்பம் உறவரினும் ................ துணிவாற்றி

................ பயக்கும் வினை.

www.kalvisolai.com